DMJ Court Kunnam

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 652/2021**

2024- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29 – ஆம் நாள் செவ்வாய் கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிவண்ணன் | தொழில் | : | ஆசிரியர் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | பொன்னுசாமி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | அத்தியூர் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 54/2024 |

**பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை** :-

நான் தாவா வழக்கில் பிரதிவாதி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். 28.02.1932 ஆம் ஆண்டு ஏற்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.02.2018 ஆம் தேதி பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகம் **பி.வா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் உள்ள பட்டா எண். 526 சர்வே எண். 88/7E–க்குரிய கணினி வழி அ.பதிவேடு **பி.வா.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி பெயரில் தாவ சொத்திற்குரிய பட்டா எண். 1571–ன் கணினி சிட்டா சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி பெயரில் உள்ள தாவா புல எண். 88/1E–க்குரிய அ. பதிவேட்டின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.01.1979 ஆம் ஆண்டு தாவா சொத்து புல எண்ணின் 88/7–ல் 0.2 1/2 செண்ட் நிலத்திற்குரிய அறுதி ஆவணம் **பி.வா.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதியின் தந்தை பொன்னுசாமி பெயரில் உள்ள பட்டா எண். 526–ன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.12.2018 ஆம் தேதியன்று பிரதிவாதி மற்றும் ஆய்வாளர் நில அபகரிப்பு மற்றும் பெரம்பலூர் மாவட்ட எஸ்.பி, டி.எஸ்பி ஆகியோருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கு 18.04.2008 ஆம் தேதியன்று பிரதிவாதியின் தகப்பனார் செலுத்திய வாய்தா ரசீது **பி.வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா

சொத்திற்குரிய 1422 முதல் 1431 வரை தாவா சொத்திற்குரிய பயிர் அடங்கல் கணக்கு (எண்ணிக்கை 10) சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :-

இல்லை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMI cum JM Court, Kunnam